உண்ணாவிரதம் இருக்கவோ கூட அந்தத் தொழிலாளர்களின் உரிமை மறுக்கப்பட்டிருக்கிற காரணத்தால் இந்தப் பிரச்சினை மேலும் சிக்கலாகியிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு 1,400 தொழிலாளர்களும்—கடந்த ஜூன் மாதத்திலிருந்து வேலையில்லாமல் இருக்கிற அவர்கள் எல்லோரும்—வேலைக்குத் திரும்ப ஏற்பாடு செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு.வரதராசன் அவர்கள் இங்கே விவரித்திருக்கிற பிரச்சினையை அரசு பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறது. அந்தத் தொழிற்சாலையில் பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு மீண்டும் எப்படியாவது வேலை வாங்கித் தர வேண்டும் என்ற அடிப்படையில் பிரின்சிபல் எம்ப்ளாயர் என்கிற அந்த நிறுவனத்தோடு பேச்சு வார்த்தை நடத்துவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்று இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

(முற்பகல் 10–10.)

(இ) விளவங்கோடு தாலுக்காவிலுள்ள முந்திரித் தொழிற்சாலைகளுக்கு கச்சா முந்திரி செல்வதை கேரள அதிகாரிகள் தடுத்தல்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு தலைவரவர்களே, என்னுடைய கன்னியாகுமரி மாவட்டத்திலே கேரளா பார்டர் விளவங்கோடு தாலுகாவின் பகுதியிலே பல்வேறு முந்திரி தொழிற்சாலைகள் இருக்கின்றன. அந்த முந்திரி தொழிற்சாலைகளுக்கு கச்சா முந்திரி தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளிலிருந்து கொள்முதல் செய்துகொண்டு போகிறார்கள். ஏறத்தாழ 9 தொழிற்சாலைகள் கேரளாவினுடைய எல்லைப் பகுதியில் இருக்கின்றன. கேரளாவினுடைய சாலையைக் கடந்துதான் அந்தத் தொழிற்சாலைகளுக்குச் செல்ல வேண்டி இருக்கின்றது. கேரளா சாலையிலே நம்முடைய கச்சா முந்திரியை லாரிகளில் கொண்டு போகும் போது கேரளா போலீஸ் அதைத் தடுத்து நிறுத்தி 'சீஸ்' பண்ணுகிறார்கள். ஆகையினால் அந்த 9 தொழிற்சாலைகளுக்கும் கச்சா முந்திரி கொண்டுபோக முடியாத சூழ்நிலை இருக்கிறது. அங்கு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். ஏறத்தாழ ஒரு மாத காலத்தில் அந்தத் தொழிற்சாலைகள் மூடப்படுகின்ற நிலைமை இருக்கின்றது. அந்த ஆலைகளை நடத்துகின்றவர்கள் எல்லாம் கேரள முதலாளிகள். நமக்குக் கிடைப்பது தொழில் மட்டும்தான். ஆனால் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்காத நிலைமை இருக்கின்ற காரணத்தால் தயவுசெய்து கேரள மாநில

முதல்வர் ஈ. கே. நாயனார் அவர்களும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் பேச்சு வார்த்தை நடத்தி இங்கே இருந்து கொள்முதல் செய்ய ஆணையிடப்பட்டு சரியான முறையில் ரிக்கார்டு பூர்வமாக கொண்டு செல்லப்படுகின்ற கச்சா முந்திரி அந்தத் தொழிற்சாலைகளுக்குச் செல்லும்போது கேரள போலீஸ் தடுக்கக் கூடாது. ஏனென்று சொன்னால் அந்த பார்டர் பிரிந்து அந்த அளவுக்கு இருக்கிறது. சில பகுதி களில் வரும்போது கேரள சாலைக்கு வந்துதான் பிறகு நம்முடைய தமிழ்நாட்டு எல்லைக்கு வர வேண்டி இருக்கிறது. ஆகையினால் அந்தப் பகுதியிலே வரும்போது ரிக்கார்டு பூர்வ மாக கொள்முதல் செய்து, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கொள்முதல் செய்த கச்சா முந்திரியை அந்த 9 தொழிற்சாலை களுக்குக் கொண்டு போவதற்கு தடை செய்யக் கூடாது என்று சொல்லி அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தங்கள் மூலமாக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர் கள் இங்கே எடுத்துக் கூறிய விவரங்களை முறையாக எனக்கு விவரமாக எழுதித் தருவார்களேயானால் அது குறித்து ஏற்ற நடவடிக்கைகளை அரசின் சார்பாக எடுக்க இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஈ) விருதுநகர் நகராட்சியில் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப் படும் திட்டங்கள்.

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, நகர்ப்புற வளர்ச்சிக்காகவும், போக்குவரத்து மேம் படவும் மத்திய அரசின் மூலமாக உலக வங்கியிலிருந்து சுமார் 640 கோடி ரூபாய்க்கு நம்முடைய தமிழக அரசு நிதி உதவி பெற்று வருகின்றது. இந்த நிதி உதவி போக்கு வரத்து வளர்ச்சிக்காகவும், பல்லவன் போக்குவரத்து கழகத் துக்கும் பெறப்பட்டு அந்தத் திட்டங்கள் எல்லாம் நடைபெற்று வருகிற சூழ்நிலையிலும் கூட—நகராட்சிகளுக் காக வழங்கப்பட்ட நிதி—கடந்த ஜனவரி மாதமே அந்த வேலைகள் எல்லாம் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்ற நிலை இருந்தபோதிலும் கூட இன்னமும் அந்த வேலைகள் ஆரம்பிக்கப் படவில்லை. இதற்கு முக்கியமான காரணம் அதற்கு கிர்லோஸ்கார் கன்சல்டன்ட் என்று ஒருவரை நியமித்து இருக்கிறார்கள். அவர்கள் பார்க்கக்கூடிய வேலை கொஞ்சமும் சரி இல்லை. அதனுடைய கூட்டத்தை நானே நான்கு